ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

14 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

| | | |
|---|---|---|
| කතෝලික ධර්මය I, II<br>கத்தோலிக்க திருமறை I, II<br>Catholicism I, II | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

## கத்தோலிக்க திருமறை I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** இறை வார்த்தையை பரம்பரை பரம்பரையாக உலகிற்களித்த பாரம்பரியம் யாது?
(1) எழுத்து வடிவம் (2) குரு (3) வாய்மொழி (4) யாவே

**2.** புதிய ஏற்பாட்டில் அடையாளங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ள நூல் எது?
(1) திருவெளிப்பாடு (2) திருமுகம்
(3) சாலமோனின் ஞானம் (4) நற்செய்தி

**3.** திருவெளிப்பாட்டு இலக்கியத்தில் இடம்பெறும் வெள்ளை நிறக் குறியீட்டின் கருத்து
(1) பஞ்சம் (2) மரணம் (3) யுத்தம் (4) வெற்றி

**4.** "உம்மக்களுக்கு நீதி வழங்கவும் நன்மை தீமையைப் பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்." இவ்வாறு இறைவனிடம் செபித்தவர்
(1) தாவீது அரசன் (2) சாலமோன் அரசன் (3) பார்வோன் அரசன் (4) ஏரோது அரசன்

**5.** இயேசுவின் தோள்மீது சுமத்தப்பட்ட சிலுவையைச் சுமந்துகொண்டு செல்ல உதவியவர்
(1) சிரேனிய சீமோன் (2) சீமோன் பேதுரு (3) உரோமப் படைவீரர் (4) நிக்கதேமு

**6.** 1543 இல் இந்நாட்டுக்கு வருகை தந்த முதல் மறை போதகக் குழுவினர் என்ன பெயரால் அழைக்கப்பட்டனர்?
(1) பிரான்சிஸ்கன் சபையினர் (2) டொமினிக்கன் சபையினர்
(3) அகுஸ்தினார் சபையினர் (4) இயேசு சபையினர்

**7.** பின்வரும் சம்பவங்களைக் கருத்திற் கொள்க.
A - கத்தோலிக்க குருக்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டமை
B - மறைப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை
C - கத்தோலிக்க மறையைப் பின்பற்றுவது தடைசெய்யப்பட்டமை
D - கத்தோலிக்க குருமடங்கள் ஆரம்பிக்கப்பட்டமை
E - திருப்பலி நிறைவேற்றுவது தடைசெய்யப்பட்டமை
மேற்கூறிய சம்பவங்களில் ஒல்லாந்தர் கரையோரப் பகுதியை ஆட்சி செய்த காலத்தில் நடைப்பெற்றவற்றை உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) A, B, C (2) A, C, E (3) B, C, E (4) C, D, E

**8.** அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரால் எழுதப்பட்ட ஒரு நூல்
(1) மோட்ச பாதை (2) கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி
(3) ஞான இலக்கியம் (4) தேவ வேத புராணம்

**9.** நற்செய்தியாளர்கள் நால்வரும் குறிப்பிடும் ஒரே ஒரு அருங்குறி
(1) கைசூம்பியவரைக் குணமாக்கியமை (2) இலாசரை உயிர்ப்பித்தமை
(3) அப்பங்களைப் பலுகச் செய்தமை (4) முடக்குவாதமுற்றவரைக் குணமாக்கியமை

**10.** இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவிய நிகழ்வை தமது நற்செய்தியில் எடுத்துக்காட்டும் ஒரேயொரு நற்செய்தியாளர்
(1) தூய லூக்கா (2) தூய யோவான் (3) தூய மத்தேயு (4) தூய மாற்கு

[பக். 2 ஐப் பார்க்க

**11.** அன்பின் கன்னியர் சபையை ஆரம்பித்தவர்
(1) தூய II ஆம் அருளப்பர் சின்னப்பர் (2) தூய அன்னை தெரேசா
(3) அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் (4) தூய மரிய கொறற்றி

**12.** உண்மைக்குச் சான்று பகர்ந்ததன் காரணமாக புனிதராக்கப்பட்டவர்
(1) அசிசி நகர் தூய பிரான்சிஸ் (2) தூய மக்ஸிமிலியன் கோல்மே அடிகளார்
(3) தூய செபஸ்தியார் (4) பாதுவாவின் தூய அந்தோனியார்

**13.** விடுதலைப்பயணம் 20:3-6 இன்படி "என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது" என எடுத்துக்காட்டுவது
(1) முதலாம் கட்டளை (2) மூன்றாம் கட்டளை (3) நான்காம் கட்டளை (4) பத்தாம் கட்டளை

**14.** தனியார் சொத்துக்களைக் கையாளும் முறை பற்றி இறைவன் நமக்குத் தரும் கட்டளைகள் இரண்டுமாவன,
(1) 1ஆம் 3ஆம் கட்டளைகள் (2) 2ஆம் 3ஆம் கட்டளைகள்
(3) 6ஆம் 9ஆம் கட்டளைகள் (4) 7ஆம் 10ஆம் கட்டளைகள்

**15.** தவக்காலம் ஆரம்பிப்பது
(1) குருத்தோலை ஞாயிறன்று (2) பெரிய வியாழனன்று
(3) விபூதிப் புதனன்று (4) பெரிய வெள்ளியன்று

**16.** திருவழிபாட்டு ஆண்டில் பச்சை வர்ணம் பயன்படுத்தப்படுவது
(1) தவக்காலத்தில் (2) பொதுக் காலத்தில்
(3) கிறிஸ்து பிறப்புக் காலத்தில் (4) பாஸ்கா காலத்தில்

**17.** திருப்பலியில் பயன்படுத்தப்படும் செபங்கள் சில பின்வருமாறு:
A - நற்கருணை மன்றாட்டு
B - சபை மன்றாட்டு
C - விசுவாசிகளின் மன்றாட்டு
D - காணிக்கை மீது மன்றாட்டு
E - நன்றி மன்றாட்டு
மேற்கூறியவற்றுள் திருப்பலிக்குத் தலைமை தாங்கும் குருவானவரின் செபங்கள் மூன்றையும் உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) A, B, C (2) A, C, E (3) B, D, E (4) C, D, E

**18.** உன்னத குருவின் செபம் முழுவதிலும் உள்ளடங்கியிருக்கும் பிரதான தொனிப்பொருள்
(1) சமாதானம் (2) கீழ்படிதல் (3) ஒற்றுமை (4) தாழ்மை

**19.** இயேசு தம்மையே பிட்டுக் கொடுத்தமையை அடையாளப்படுத்துவது
(1) அப்பத்தைப் பிட்குதல் (2) சமாதான வாழ்த்து
(3) நன்றி மன்றாட்டு (4) இயேசு கற்பித்த செபம்

**20.** இயேசு உன்னத குருவின் செபத்தின் பின்னர் சென்ற இடம்
(1) ஒலிவ மலை (2) கல்வாரி மலை (3) தாபோர் மலை (4) கெத்சமனி பூங்கா

**21.** இஸ்ரயேல் பாரம்பரியமாகக் கொண்டிருந்த இறை நம்பிக்கை, அனுபவங்களின் அடிப்படையிலே திருவிவிலியத்தில் உருவாகிய புத்தகத் தொகுதி
(1) பஞ்சாகமம் (2) இறைவாக்கினர் நூல்கள் (3) ஞான நூல்கள் (4) வரலாற்று நூல்கள்

**22.** இறைவனின் செய்தியை எடுத்துரைப்போர்
(1) பரிசேயர் எனப்படுவர். (2) சதுசேயர் எனப்படுவர்.
(3) இறைவாக்கினர் எனப்படுவர். (4) குருக்கள் எனப்படுவர்.

**23.** இறை அரசின் நற்செய்தி எனப்படுவது
(1) தூய மாற்கு நற்செய்தியாகும். (2) தூய லூக் நற்செய்தியாகும்.
(3) தூய மத்தேயு நற்செய்தியாகும். (4) தூய யோவான் நற்செய்தியாகும்.

**24.** தொடக்க நூலில், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எனக்குறிப்பிடப்படும் அதிகாரங்கள் எவை?
(1) தொடக்க நூல் 1 - 10 (2) தொடக்க நூல் 1 - 11
(3) தொடக்க நூல் 1 - 12 (4) தொடக்க நூல் 12 - 50

**25.** புதுப்படைப்பின் ஆரம்ப கர்த்தாவாக அழைப்பைப் பெறக் காரணமான சில பிரதான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
- அவர் ஒரு நீதிமான்.
- அவரின் பரம்பரையில் அவரே குற்றமற்றவர்.
- அவர் இறைவனோடு நல்லுறவை வளர்த்திருந்தார்.

இவ்விடயங்களினால் குறிப்பிடப்படும் நபர்
(1) மோசே (2) ஈசாக் (3) ஆபிரகாம் (4) நோவா

[பக். 3 ஐப் பார்க்க

**26.** இஸ்ராயேல் இனத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த எகிப்திய பார்வோன் அரசன் மூவித செயற்பாடுகளை மேற்கொண்ட காலத்தில் பிறந்தவர்
(1) ஆபிரகாம் (2) யாக்கோபு (3) மோசே (4) யோசேப்பு

**27.** இறைவன் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கையை முன்வைத்த மரபுகள் இரண்டுமாவன
(1) D யும் P யும் (2) J யும் D யும் (3) J யும் E யும் (4) J யும் P யும்

**28.** இயேசு பாலைநிலத்தில் சோதனைக்கு உள்ளாக்கப்பட்ட நாட்கள்
(1) 30 (2) 40 (3) 50 (4) 60

**29.** சீடர்கள் 72 பேரை மறைத்தூதுரைப் பணிக்காக அனுப்பும்போது பணப்பையோ வேறு பைகளோ பாதணிகளோ எடுத்துச் செல்ல வேண்டாம் என அறிவுரை வழங்கப்பட்டமையிலிருந்து எடுத்துக்காட்டப்படுவது
(1) இறை பராமரிப்பு (2) இறை அன்பு (3) இறை மகிமை (4) இறை இரக்கம்

**30.** ஞானப் பெற்றோராவதற்கு, குறித்த இருவருக்கும் இருக்க வேண்டிய தகுதி
(1) 20 வயதைக் கடந்தவர்களாயிருத்தல்
(2) திருமணம் செய்தவர்களாயிருத்தல்
(3) பணம் படைத்தோராயிருத்தல்
(4) புகுமுக அருளடையாளங்களைப் பெற்றிருத்தல்

**31.** ஒப்புரவு அருள் அடையாளத்தைப் பெற விரும்பும் ஒருவர் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
A - ஆன்மீக பரிசோதனையில் ஈடுபடல்
B - மீண்டும் பாவம் செய்யாதிருக்கத் தீர்மானித்தல்
C - செய்த பாவங்களை வெளிப்படுத்துதல்
D - செய்த பாவங்களுக்காக மனம் வருந்துதல்
E - தரப்படும் தண்டனைகளை நிறைவேற்றிக் கொள்ளலும் தபச் செயல்களில் ஈடுபடுதலும்
இப்படிமுறைகளை சரியான ஒழுங்கில் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, C, D, E (2) A, D, B, C, E (3) D, C, B, A, E (4) E, D, C, B, A

**32.** சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் இரண்டுமாவன
(1) குருத்துவம், மெய்விவாகம் (2) திருமுழுக்கு, குருத்துவம்
(3) குருத்துவம், நற்கருணை (4) உறுதிப்பூசுதல், குருத்துவம்

**33.** ஏகாந்திகள் அல்லது வனத்துப் பிதாக்கள் என்று அழைக்கப்பட்டவர்களில் முதன்மையானவர்
(1) எகிப்து தூய அந்தோனியார் (2) தூய பசில்
(3) தேப்ஸ் சின்னப்பர் (4) தூய ஆசீர்வாதப்பர்

**34.** பொதுக் குருத்துவத்தின் மூலம் கிடைக்கும் இறைவாக்குப் பணியில் ஈடுபட உதவியாய் அமைவது
(1) கத்தோலிக்க மறைப்பாடசாலை (2) இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம்
(3) மரியாயின் சேனை (4) தூய வின்சன் டி போல் சபை

**35.** பின்வருவன ஆன்மீக, உடலியல் இரக்கச் செயல்கள் சிலவாகும்.
A - பாவிகளை மனம் திருப்புதல்
B - இறந்தோரை அடக்கம் செய்தல்
C - துன்பப்படுவோருக்கு ஆறுதல் கூறுதல்
D - அடிமைகளை விடுவித்தல்
மேற்கூறியவற்றில் ஆன்மீக இரக்கச் செயல்களாவன
(1) A, C (2) A, D (3) B, D (4) C, D

**36.** ஒரு சந்தி அனுசரிக்கக் கடமைப்பட்ட நாட்கள்
(1) விபூதிப் புதனும் குருத்தோலை ஞாயிறும் (2) விபூதிப் புதனும் பெரிய வெள்ளியும்
(3) பெரிய வியாழனும் குருத்தோலை ஞாயிறும் (4) வருடத்தில் எல்லா வெள்ளிகளும் விபூதிப் புதனும்

**37.** இயேசு தமது சீடர்களுக்கு இறைவனை எவ்வாறு அழைக்குமாறு கற்றுக்கொடுத்தார்?
(1) 'விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே' என (2) 'அப்பா தந்தாய்' என
(3) 'என் ஆண்டவரே' என (4) 'என் தேவனே' என

**38.** செபத்தின் மூலம் கேட்பது தவறாது கிடைக்கும் என்னும் நம்பிக்கையுடன் செய்யும் விசுவாச அறிக்கை யாது?
(1) அல்லேலூயா (2) மகிமை உண்டாவதாக (3) சாலோம் (4) ஆமென்

**39.** 1917 ஆம் ஆண்டில் பல சந்தர்ப்பங்களில் மரியன்னை காட்சி கொடுத்தது
(1) இந்தியாவில் வேளாங்கண்ணியிலாகும். (2) பிரான்சில் லூர்து நகரிலாகும்.
(3) இத்தாலியில் லன்சியானோ நகரிலாகும். (4) போர்த்துக்கலில் பாத்திமா நகரிலாகும்.

**40.** இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் பின் திருப்புகழ்மாலை எவ்வாறு அழைக்கப்பட்டது?
(1) திருப்பலி என (2) மாலை ஆராதனை என
(3) இறைவனின் பணி என (4) நாளிகை திருவழிபாடு என

**

[பக். 4 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

14 T I,II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

කතෝලික ධර්මය I, II
கத்தோலிக்க திருமறை I, II
Catholicism I, II

## கத்தோலிக்க திருமறை II

* **முதலாம்** வினாவுக்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) திருவிவிலியத்தின் பிரதான ஆசிரியரையும் துணை ஆசிரியரையும் பெயரிடுக.
(ii) பழைய ஏற்பாட்டின்படி பலி செலுத்துவதன் நோக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.
(iii) தூய மக்ஸிமிலியன் கோல்பே அடிகளார் கண்ட காட்சியில் தேவ அன்னையின் கரங்களிலிருந்த வெள்ளை நிற, சிவப்பு நிற முடிகளின் பொருளை எழுதுக.
(iv) பீடத்தை ஆயத்தம் செய்யும் சடங்கின் **இரு** உப பிரிவுகளையும் பெயரிடுக.
(v) கத்தோலிக்க திருச்சபையின் இரண்டாம் வத்திக்கான் சங்க ஒன்றுகூடலில் கிறிஸ்தவ சபையின் சமாதானத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள பிரதான விதித் தொகுப்புகள் **இரண்டும்** எவை ?
(vi) எலோகிம் மரபிற்குரிய சம்பவங்கள் **இரண்டையும்** குறிப்பிடுக.
(vii) திருமுழுக்கு வார்த்தைப்பாடுகள் **இரண்டினையும்** எழுதுக.
(viii) மனம் வருந்துதலின் **இரு** வகைகளையும் குறிப்பிடுக.
(ix) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் இறுதித்தீர்ப்பின்போது மனிதனை அளக்கும் அளவுகோல்கள் **இரண்டும்** எவை ?
(x) திருப்புகழ்மாலையைச் செபிக்கும் **இரு** பிரிவினரைப் பெயரிடுக.

**2.** (i) தூய பவுலின் அறிவுரைகளைக் கொண்டு வேறு நபர்களால் எழுதப்பட்ட **இரு** திருமுகங்களையும் பெயரிடுக.
(ii) மறைத்தூதுரைப் பயணங்களில் தூய பவுலுக்கு முகங்கொடுக்க நேர்ந்த சவால்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.
(iii) தூய பவுலின் வாழ்க்கையிலிருந்து நீர் கற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

**3.** (i) பெரிய இறைவாக்கினர்கள் **இருவரைப்** பெயரிடுக.
(ii) எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் பண்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக.
(iii) இன்றைய சமுதாயத்தில் இறைவார்த்தையின் பணியாளராக இறைவார்த்தையை மற்றவர்களிடத்திற்கு எடுத்துச் செல்வதற்கான உமது ஆலோசனைகள் **ஐந்தினை** முன்வைக்குக.

**4.** (i) திருமுழுக்கு யோவானின் தாய், தந்தையின் பெயர்களை எழுதுக.
(ii) திருமுழுக்கு யோவான், சாதாரண மக்களுக்கும் வரிதண்டுபவர்களுக்கும் படைவீரர்களுக்கும் வழங்கிய ஒவ்வொரு போதனை வீதம் எழுதுக.
(iii) திருமுழுக்கு யோவானின் போதனைகள் இன்றைய சமுதாயத்திற்கு எந்தளவு பொருந்தும் என்பது பற்றி **ஐந்து** காரணிகளின் துணையுடன் விளக்குக.

**5.** (i) இயேசு இறை ஆட்சியின் மதிப்பீடுகள் பற்றிக் கற்பித்த உவமைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(ii) தூய மத்தேயு நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பேறுகள் **மூன்றினை** எழுதுக.
(iii) திருமுழுக்கின் மூலம் ஓர் இறைவாக்கினராக அழைக்கப்பெற்ற நீர், பிற மதத்தவர் முன்னிலையில் இறைவனுக்கு எவ்வாறு சான்று பகருவீர் என்பதனை **ஐந்து** காரணிகளின் துணையுடன் விவரிக்குக.

**6.** (i) திருமுழுக்கின்போது பயன்படுத்தப்படும் அடையாளத்திற்குரிய பொருட்கள் **இரண்டினைப்** பெயரிடுக.
(ii) புகுமுக அருளடையாளங்கள் **மூன்றையும்** குறிப்பிடுக.
(iii) திருமுழுக்கின் மூலம் கிடைக்கும் இறை அருளை, கிறிஸ்தவ மாணவராக நீர் எவ்வாறு நடைமுறைப்படுத்துவீர் என்பதனை **ஐந்து** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

**7.** பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **இரண்டுக்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
(i) திருத்தூதர் பணி நூல்
(ii) தூய யோசப் வாஸ் அடிகளாரின் பணிகள்
(iii) நோயில் பூசுதல் அருளடையாளம்
(iv) தூய செபமாலை

* * *

PAST PAPERS WIKI

# ප්‍රශ්නපත්‍ර පොත්

# ගෙදරටම ගෙන්වා ගන්න

# ඔන්ලයින් ඕඩර් කරන්න

www.store.pastpapers.wiki

# වෙත යන්න

BUY NOW

Secure Payments By PayPal

NO PAYPAL ACCOUNT NEEDED!

# ONLINE BOOK STORE

An evening of fun for young readers

